**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-35** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.விசாலாட்சி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 24th day of September 2024.

**(3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி ஆகிய **3** முதல் **6** எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(1** மற்றும் **8** எதிரிகள் ஆஜர் இல்லை**. 1** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு**,** மனு அனுமதிக்கப்பட்டது**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

அ.சா.35 திருமதி.விசாலாட்சி, சென்னை, தடய அறிவியல் துறையில் கணிணி தடயவியல் பிரிவில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருவதால், சென்னையிலிருந்து கரூருக்கு வந்து செல்லும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றம் **Crl**.**M**.**P**.**No**.1139/2024 ல் கடந்த 21.09.2024 தேதியில் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து, அ.சா.35 திருமதி.விசாலாட்சி, சென்னை மாநகர உரிமையியல் காணொலி அரங்கில் முன்னிலையாகியுள்ளார். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற காணொலி அரங்கில் உள்ள அ.சா.35 இந்நீதிமன்றத்தில் காணொலி மூலம் காணொலி திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சி அமர்ந்துள்ள சென்னை, மாநகர உரிமையியல் நீதிமன்ற காணொலி அரங்கில் அவர் அருகில் வேறு யாரும் இல்லை என்று நீதிமன்ற **Assistant Programmer** திருமதி.உமாதேவி, என்பவர் மூலம் உறுதி செய்யப்பட்டு சாட்சி இந்நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் திருமதி.ஜெயந்தி, அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில், கணிணி தடயவியல் பிரிவில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2021 அன்று வேலாயுதம்பாளையம் காவல்நிலைய குற்ற எண். 778/2020 வழக்கில் சம்மந்தப்பட்ட முத்திரையிடப்பட்ட ஒரு காகித பொட்டலம் ஒன்று இரண்டாம்நிலை காவலர் திரு.சதீஸ்குமார் என்பவர் மூலம் நீதித்துறை நடுவர் எண்.2, கரூர் அவர்களின் கடிதத்துடன் எங்கள் ஆய்வகத்தில் பெறப்பட்டது. அவற்றிற்கு CF No. 32/2021, நாள். 01.02.2021

என வழங்கப்பட்டது. முத்திரையிடப்பட்ட காகித பொட்டலத்தின் மீது வேலாயுதம்பாளையம் காவல்நிலைய குற்ற எண். 778/2020, R.P.No. 01/2021 என குறிக்கப்பட்டிருந்தது. காகித பொட்டலத்தின் மீதிருந்த முத்திரை நீதிமன்ற கடிதத்தில் கொடுக்கப்பட்டிருந்த மாதிரி முத்திரையுடன் ஒப்பிட்டு பார்த்ததில் சரியாக இருந்தது. அந்த காகித பொட்டலத்தை பிரித்து பார்த்தபோது, அதில் மூன்று முத்திரையிடப்பட்ட காகித உறைகள் இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் ஒரு பென்டிரைவ் மற்றும் காம்பேக்ட் டிஸ்க் சிடி இருந்தது. விவரங்கள் அனைத்தும் ஆய்வறிக்கையில் உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட, வழக்குச்சொத்துக்கள் கணிணி தடயவியல் பகுப்பாய்வுக்கு (Computer forensic examination) உட்படுத்தப்பட்டது.

<u>அயிட்டம் **1-A**</u>

அயிட்டம் 1-A ல் உள்ள பென்டிரைவ் Forensic software tool UFED 4PC மூலம் அவற்றிலிருந்த கோப்புகள் வெளிகொணரப்பட்டன. அவற்றில் இரண்டு வீடியோ காணொலி பதிவுகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை பற்றிய குறிப்புகள் ஆய்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

<u>அயிட்டம் **1-B**</u>

அயிட்டம் 1-B ல் உள்ள காம்பேக்ட் டிஸ்க்கில் இரண்டு வீடியோ கோப்புகள் அயிட்டம் 1-A பென்டிரைவில் உள்ள இரண்டு வீடியோ கோப்புகள் அவற்றில் காணப்பட்டன.

<u>அயிட்டம் **2-A**</u>

அயிட்டம் 2-A ல் உள்ள பென்டிரைவ் forensic software tool UFED 4 PC மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் இருந்த தகவல்கள் வெளிகொண்டு வரப்பட்டன. அவற்றில் ஒரு வீடியோ கோப்பு சேமித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த வீடியோ கோப்பின் விவரங்கள் ..........

ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

<u>அயிட்டம்</u> **<u>2-B</u>**

அயிட்டம் 2-B ல் உள்ள காம்பேக்ட் டிஸ்க்கில் ஒரு வீடியோ கோப்பு பென்டிரைவ் அயிட்டம் 2-A ல் உள்ளதுபோல் காணப்பட்டது.

<u>அயிட்டம்</u> **<u>3-A</u>**

அயிட்டம் 3-A ல் உள்ள பென்டிரைவ் Forensic software tool UFED 4PC மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, அதிலிருந்த தகவல்கள் வெளிகொணரப்பட்டன. அவற்றில் நான்கு வீடியோ பதிவுகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் விவரங்கள் ஆய்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

<u>அயிட்டம்</u> **<u>3-B</u>**

அயிட்டம் 3-B ல் உள்ள காம்பேக்ட் டிஸ்க்கில் நான்கு வீடியோ பதிவுகள் அயிட்டம் 3-A ல் உள்ள பென்டிரைவ்வில் உள்ளதுபோல் காணப்பட்டன. மேற்குறிப்பிட்ட வீடியோ கோப்புகளை மேற்குறிப்பிட்ட அயிட்டம் 1-A, 2-A, 3-A வீடியோ கோப்புகளை ஒரு டிவிடி-யில் காப்பி செய்து, அவற்றிற்கு CF 32/21 என குறியீடு செய்யப்பட்டது.

இந்த ஆய்வறிக்கை, ஆய்வகத்தில் காப்பி செய்யப்பட்ட டிவிடி மற்றும் வழக்குச்சொத்துக்களுடன் ஆய்வக முத்திரையிட்டு, 27.04.2021 அன்று காவலர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த ஆய்வறிக்கையில் நானும், உதவி இயக்குநர் திரு.மணிவண்ணன் அவர்களும் கையெழுத்திட்டோம். என்னிடம் காட்டப்படுவது அந்த அறிக்கை. அது நீ.ம.சா.ஆ.1.

ஆய்வகத்தில் காப்பி செய்யப்பட்ட டிவிடி என்னிடம் காட்டப்படுவது. அது நீ.ம.சா.ஆ.2.

நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பென்டிரைவ் அயிட்டம் 1-A அ.சா.ஆ.33

நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சிடி அயிட்டம் 1-B அ.சா.ஆ.34

நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பென்டிரைவ் அயிட்டம் 2-A அ.சா.ஆ.35

நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சிடி அயிட்டம் 2-B அ.சா.ஆ.36

நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பென்டிரைவ் அயிட்டம் 3-A அ.சா.ஆ.37

நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சிடி அயிட்டம் 3-B அ.சா.ஆ.38

*(அ.சா.ஆ.33 முதல் 38 வரையிலான மின்னணு ஆவணங்கள் பிரிவு 65 பி-ன் கீழான சான்றிதழ் இல்லை என்பதால் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனைக்குட்பட்டு மேற்படி சொத்துக்கள் குறியீடு செய்யப்பட்டன).*

**<u>1 , 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஆய்வு செய்த வீடியோ பதிவுகள் DVR NVR லிருந்துதான் ஆய்வு செய்ய முடியும் என்றால் எங்கள் ஆய்வகத்திற்கு பென்டிரைவ்கள் மற்றும் சிடிகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. வீடியோ பதிவுகளில் அசல்களான DVR NVR ஆகியவை எங்கள் ஆய்வக பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் ஆய்வு செய்த ......

ஆய்வுகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உரிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில், அ.சா.ஆ.33, 35, 37 க்குரிய Hash value MB5 என விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**6** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்